# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/15 - 2018 මැයි මස 15 වැනි අඟහරුවාදා - 2018.05.15

*2071/15 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 05/ 2018*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*ஆர். எச். எஸ். சமரதுங்க,*
*செயலாளர்,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, மே 15.*

***1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்***

*கட்டளை*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், 2018, மே மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக்கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களை, இக்கட்டளை மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, மே 15.*


1A - PG 4045 — 557 (2018/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை முன்னுரிமை (4) | சுங்கத் தீர்வை பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| ***27.10*** | | | ***பெற்றோலியம் எண்ணெய்களும், நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப் பட்ட எண்ணெய்களும், சுத்திகரிக்கப் படாதவை தவிர்ந்தவை :வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது சேர்க்கப் படாத நிறையில் 70 அல்லது கூடுக ளாக பெற்றோலிய எண்ணெய் அல்லது நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருட்களிலி ருந்து பெறப்பட்ட எண்ணெய்யைக் கொண்ட தயாரிப்புகள், இவ்வெண் ணெய்கள் இத்தயாரிப்புகளின் அடிப் படை உள்ளீடுகளாக இருக்க வேண் டும்*** | | | |
| | | | | | | |
| | | - | ***நிலக்கீழ்சார்ந்த கனிப் பொருட்களிலி ருந்து பெறப்பட்ட பெற்றோலிய எண் ணெய்கள் மற்றும் எண்ணெய்கள் (சுத்தி கரிக்கப்படாதவை தவிர) மற்றும் வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது உள்ளடக்கப்படாத தயாரிப்புகள், நிலக் கீழ்லார்ந்த கனிப் பொருட்களி லிருந்து பெறப்பட்ட பெற்றோலிய எண்ணெய் அல்லது எண்ணெய்களா னது நிறையளவில் 70 அல்லது அதற்கு மேற்பட்ட அளவினைக் கொண்டவை, இவ்வெண்ணெய்கள் தயாரிப்புகளானது அடிப்படை உள் ளீடுகளாக இருத்தல் வேண்டும். அவை பயோ டீசலினைக் கொண் டவை தவிர மற்றும் கழிவு எண் ணெய்கள் தவிரவும்*** | | | |
| | | | | | | |
| | | --- | பெற்றோல் : | | | |
| | *2710.12.21* | ---- | ஒக்ரேன் 92 அடங்கிய பெற்றோல் | | ஒரு லீற்றர் ரூபா 25.42 | கி. கிராம் |
| | *2710.12.22* | ---- | ஒக்ரேன் 95 அடங்கிய பெற்றோல் | | ஒரு லீற்றர் ரூபா 25.59 | கி. கிராம் |
| | *2710.12.29* | ---- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 25.59 | கி. கிராம் |
| | | | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை | | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னுரிமை (4) | பொது (5) | |
| | | --- | வாயு எண்ணெய்/டீசல் : | | | |
| | *2710.19.41* | ---- | சுப்பர் டீசல் - 10 மி. கி./கி. கி. இற்கு மேற்படாத சல்பர் அடங்கியது | | ஒரு லீற்றர் ரூபா 10.55 | கி. கிராம் |
| | *2710.19.42* | ---- | பிற டீசல் - 10 மி. கி./கி. கி. இற்கு மேற்பட்ட ஆனால் 500 மி. கி./கி. கி. இற்கு மேற்படாத சல்பர் அடங்கியது | | ஒரு லீற்றர் ரூபா 5.85 | கி. கிராம் |
| | *2710.19.49* | ---- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 10.55 | கி. கிராம் |

*06-259*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.